கட்டணம், மாதம் ஒன்றுக்கு ரூ. 1,300 என்ற விகிதத்தில் கோட்டம், உட்கோட்டம் இவற்றின் பணியாளர் அமைப்பிற்கான விகிதாசாரச் செலவு ஜீப் வண்டிக்கான செலவு என்று முறைப்படுத்தி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பஞ்சாயத்து ஐயாயிரம் ரூபாய் செலுத்த முடியும் என்றிருந்தால் அது பத்தாயிரம் என்று வரும்போது அந்தப் பஞ்சாயத்திற்கு இடர்ப்பாடு வரலாம். ஆகவே இந்தக் கட்டணத்தை ஏதாவது குறைத்து அமைக்க முடியுமா அல்லது எந்த அளவிற்குப் பஞ்சாயத்துக்களின் தாங்கும் சக்திக் கேற்ப அமைக்க முடியும் என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. சக்திக்கேற்ப கட்டணத்தைத் தருவதை பஞ்சாயத்துக்கள் வரவேற்கும் என எதிர்பார்க்கிறேன்.

திரு. மு. இரத்தினசபாபதி : 1974–75-ம் ஆண்டுக்கு கிராமக் குடிநீர் வழங்குவதற்காக இரண்டரைக்கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போது கிராமங்கள் இந்த இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ்க்கே பணம் கொடுக்க முடியவில்லை என்ற நிலை இருக்கும்போது இந்தப் பணத்தைச் செலவழிக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும். ஆகவே கிராமங்களுக்கு இந்த இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸை அறவே இல்லாமல் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஏற்கனவே இன்வெஸ்டிகேஷன் முடிந்திருப்பது ரூ. 15 கோடி. இரண்டரைக் கோடி ரூபாயை செலவழிக்க முடியாது என்ற நிலை வராது. வேகமாகச் செயல்பட வேண்டுமென்று விரும்புகிறோம். அந்த அளவிற்கு நிதி கிடைப்பதில்தான் இன்றைக்கு இடர்ப்பாடு இருக்கிறதே தவிர பணியாற்றுகிற வேகம் தடைப்படுகிறது என்று கருதவில்லை. ஆகவே, வசதி இல்லாத பஞ்சாயத்துக்களுக்கு எந்தளவிற்கு உதவி செய்ய முடியும், மக்கள் தொகை அடிப்படையில் விகிதாச்சாரத்தை, கட்டணத்தை வைப்பதன் மூலம் இந்தத் தொகையைக் குறைக்க முடியுமா என்பதைப் பரிசீலனை செய்யலாம்.

கல்லணைப் பாலம்.

* 460 வினா.—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கல்லணையில் அமைந்துள்ள காவிரிப் பாலத்தை பேருந்துகள் செல்லுகின்ற வகையில் அகலப்படுத்துகின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : இல்லை.

திரு. கோ. இளங்கோவன் : அணையின் அடித்தளத்தை பல லட்சம் ரூபாய் செலவு செய்து அரசு பலப்படுத்திக் கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதேபோல் மேல்பகுதியையும் விரிவுபடுத்தி திருச்சியிலிருந்து வருகிற பேருந்துகள் திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு செல்வதற்கு வசதியான முறையில் அந்த மேல் பகுதியை அகலப்படுத்த மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா ?

1974 மார்ச் 16]

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : அத்தகைய செயற்குறிப்பு இல்லை. இதற்கு அதிகப் பணம் செலவாகும் என்பதால் அரசு அதைப் பரிசீலிப்பதற்கில்லை.

திரு. கு. காமாட்சி : அது திருச்சிப் பகுதியையும் தஞ்சைப் பகுதியையும் இணைக்கும் ஒரு பாலமாகும். அங்கில்லாவிட்டாலும் பக்கத்தில் வேறு இடத்திலாவாது பாலம் கட்டித்தந்து அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் தொடர்பை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : புதிதாகக் கேட்கிருர்கள். அதுபற்றி அரசுக்கு எழுதியனுப்பினுல் அரசு பரிசீலிக்கும்.

திரு. கோ. இளங்கோவன் : புதிதாக மேகனத்தூரில் வெண்ணுற்றில் ஒரு பாலம் கட்டப்படுகிறது. அந்தச் சாலையையாவது தொடர்புபடுத்தித் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : அதுபற்றித் தகவல் இல்லை.

பழவாற்று உபரி நீர்.

* 461 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் தாலுக்கா பழவாற்றின் மிகுதி நீரை மாயூரம் தலைஞாயிறிலிருந்து கொள்ளிடத்தில் சேர்ப்பித்திடுவதற்கான திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பழவாற்றிலிருந்து உபரித் தண்ணீரைக் கொள்ளிடத்தில் சேர்ப்பித்திடுவதற்கான திட்டம் எதும் பரிசீலனையில் இல்லை.

திரு. அ. தேவேந்திரன் : இந்தப் பழவாற்றில் வெள்ளக் காலத்தில் வருகிற தண்ணீரால் பழவாற்றுக்கரை உடைந்து விடுகிறது. அதைத் தவிர்க்கும் வகையில் இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டிலாவது அந்தத் தண்ணீரை கொள்ளிடத்தில் சேர்ப்பிக்கக்கூடிய விதத்தில் புதிய ஒரு ஏற்பாட்டினைச் செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : அது சாத்தியக்கூறல்ல என்பதைத் தான் தெரிவித்தேன். அதிகாரிகளும் தெரிவித்திருக்கிருர்கள். பழவாற்றைவிட கொள்ளடத்தில் உள்ள நீர்மட்டம் உயரமாக இருப்பதால் நீரை ஏற்றித்தான் கொண்டு சேர்க்க வேண்டும். அது இயலாது. பழவாற்றங்கரையைச் செப்பனிடுவதற்கும், தேவையான இடங்களில் வடிகால்கள் அமைக்கவும் வேலைகள் தொடங்கப்பட்டு பெரும்பாலும் முடிவடைந்து கொண்டிருக்கின்றன.